# தமிழ்விடு தூது

வினா விடை

1. தமிழ்விடு தூது - நூல்குறிப்பு தருக.

- சிற்றிலக்கியங்களுள் ஒன்று, வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்று வேறு பெயர்கள் உண்டு.
- இது தலைவன் தலைவியர்களுள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக "மாலையை வாங்கி வருமாறு அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் 'கலிவெண்பா'வால் இயற்றப்பட்டது.
- மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது.
- 268 கண்ணிகள் கொண்டது.
- 1930-ல் உ.வே.சா முதன்முதலில் பதிப்பித்தார். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

2. தமிழ்விடு தூது கூறும் தமிழின் சிறப்புகளை விவரி. (அல்லது)

தலைவி எடுத்துரைக்கும் தமிழின் சிறப்புகள் யாவை?

- இனிக்கும் தெளிந்த அமுதமாகவும் வீடுபேற்றைத் தரும் கனியாகவும் தமிழ் உள்ளது.
- இயல், இசை, நாடகம் என மூன்றாய் விளங்குகிறது.
- தாழிசை, துறை, விருத்தம் மூவகைப் பாவினங்கள் கொண்டது தமிழ்.
- தமிழ் பத்துக் குணங்களைப் பெற்றுத் திகழ்கிறது.
- வண்ணங்கள் ஐந்திற்குமேல் இல்லை. ஆனால், தமிழோ நூறு வண்ணங்களைக் கொண்டு திகழ்கிறது.

- உணவின் சுவை ஆறுக்கு மேல் இல்லை. ஆனால், ஒன்பது சுவை கொண்டுள்ளது தமிழ்.
- தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? ஆனால், அம்மை முதலிய அழகு எட்டினைப் பெற்றுள்ளது தமிழ்,